[18th July 1964

தான் 'ஸர்வ்' ஆகும், ஆகவே அவசியமில்லை என்று கருதி 'டிராப்' செய்யப்பட்டது. மேற்கொண்டு இதை டிஸ்டிரிக்ட் டெவலப் மெண்டு கவுன்சிலும் 'ரெகமண்டு' செய்யவில்லை. அந்த லிஸ்டில் இது இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது இரண்டு கிராமங்களுக்குத் தான் இது பயன்படும் என்று கூறினார்கள். அம்மாதிரி இல்லை. 18 கிராமங் களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 10,000 ஜனத்தொகைக்கு இது பயன் படும். அந்தப் பகுதியில் வசிக்கும் ஜனங்கள் வத்தக்குண்டுக்கு 18 மைல் சுற்றிவர வேண்டும். விவசாயப் பொருள்களைக் கொண்டு வரவேண்டும். 18 மைல் நடந்து வர முடியாது. இந்தப் பாலம் இந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன்படும். தயவு செய்து இதை மீண்டும் பரிசீலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்த பாலத்தை எடுத்துக்கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா?

Mr. SPEAKER : The Hon. Minister will consider the request of the hon. Member.

*539 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி தாலுகாவிலுள்ள சின்னாற்றுக் குறுக்கே பாலக் கோடு-பென்ரம்பட்டி ரோட்டில் மேம்பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்தப் பாலம் எப்பொழுது கட்ட துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத் தில் பாக்கியுள்ள 'ஸ்பில் ஓவர்' திட்டங்கள் முடிந்தவுடனே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் இவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

*540 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

நாகை தாலுக்காவில் ஓடும் பாண்டவையாற்றின் குறுக்கே ஆந்தைக் குடியிலிருந்து சிகார் ரோட்டை இணைக்க பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆந்தைக்குடி-வலிவலம் காலையில் 0/3 மையில் பாண்டவையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேலைக் கான டெண்டர் இப்போதுதான் முடிவு செய்யப்பட்டு. வேலையை